Date.12.09.2025.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

OS.147/2022

வா.சா. 1

பெயர். திருமதி. தேன்மொழி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>3, 6,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கில் 8 ம் இன சொத்தை 3 ம் பிரதிவாதி தனக்கு பாத்தியமான 7 ம் இன சொத்தை அரியூர் இந்தியன் வங்கியில் ஈடு வைத்து, ரூ.1,50,000/- கடனாக பெற்றும், அவரது மனைவி மீனாட்சிக்கு பாத்தியமான நகைகளை, தன்னுடைய பெயரில் கண்டமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி லிமிட்டெட்ல் அடகு வைத்து, பத்திரம் மற்றும் பதிவு செலவிற்கு கடன் வாங்கியும், 12/11/2008 ல் 3 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் 8 ம் இன சொத்தை கிரையம் பெற்று, அனுபவித்து வரும் சர்வ சுதந்திர பாத்தியமான சொத்து என்றால், அந்த சொத்துக்களை பொதுவில் தான் வாங்கினோம். அந்த சொத்திற்கான பட்டா 3 ம் பிரதிவாதி பெயரில் புஞ்சை சர்வே எண்.37/3 ல் 0.9 ஏர்ஸ்க்கு பட்டா எண்.609 வழங்கப்பட்டு, நிலவரியை அவர் தான் செலுத்தி வருகிறார் என்றால், சரிதான். மேற்படி நிலத்தில் மின் இணைப்பை பெறுவதற்காக கடந்த 30/03/1989 தேதியில் கண்டமங்கலம் மின்சார அலுவலகத்தில் மனு கொடுத்து, செயற்பொறியாளர், இயக்குதலும்,பராமரித்தலும், கண்டமங்கலம் 26/02/2008 ல் 3 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள படி ரூ.500/- 14/03/2008 தேதியில் செலுத்தியும், தன்னிறைவு திட்டத்தில் 22/10/2009 தேதியில் ரூ.10,520/- செலுத்தியும், விவசாய மின் இணைப்பை அவர் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால், பொது வருமானத்தை வைத்து வாங்கியுள்ளார். மேற்படி சொத்தில் வாதிக்கோ, இதர பிரதிவாதிகளுக்கோ, யாதொரு உரிமையும், பாத்தியமும் இல்லை

என்றால், பொதுவில் தான் அனைவரும் உழைத்து வாங்கினோம். நான் திருமணம் ஆகி என் மாமியார் வீடு சென்றுவிட்டேன். அரியலூர் வங்கியில் வாங்கிய கடன் ரூ.1,50,000/- க்கு 01/05/2021 வரை, கூடிய வட்டியும் சேர்த்து, ரூ.5,93,792/- செலுத்த வேண்டியுள்ளது என்று சொன்னால், கடன் எதுவும் இல்லை. இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி மீனாட்சி என்பவரை எதற்காக சேர்த்துள்ளோம் என்றால், அவர்கள் பெயரில் உள்ள சொத்து பொதுவில் வாங்கிய சொத்தாகும். பொதுவில் வாங்கிய சொத்தை யாரிடம், எவ்வளவு ரூபாய்க்கு, எந்த சொத்தை வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால், ஒரு உஷாராணி என்பவரிடம் வாங்கினார்கள். சர்வே எண் எனக்கு தெரியாது. எந்த தேதி, எந்த வருடம், யார் யாரிடம் எவ்வளவு சர்வே எண்கள் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் அருகில் இருந்து சொத்து எதையும் வாங்கிக் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரிதான். வழக்கில் எதிர் தரப்பினர்கள் என்ன பதில் போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால், தெரியாது. 7ம் பிரதிவாதி மீனாட்சி என்பவர் அவருக்கு பாத்தியமான நகைகளை அவரது கணவர் 3ம் பிரதிவாதி இளங்கோவின் மூலம், கண்டமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி லிமிடெட்டில் அடகு வைத்து, 24/12/2008 தேதியில் ரூ.25,000/- க்கு தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கி, சர்வ சுதந்திர பாத்தியமாக சொத்தை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால், அவர் அனுபவித்து வரவில்லை. பொதுவில் தான் அனுபவித்து வருகிறோம். அந்த சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், மீனாட்சி பெயரில் உள்ளது. எனவே அந்த சொத்தில் எனக்கோ, இதர 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**